ந.க.எண்: 18 **பத்திரிக்கைச் செய்தி** நாள்: 6/7/18

**2019-ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் மத்திய அரசால் அறிவிக்கவிருக்கும் பத்ம விருது பெற தகுதி வாய்ந்தோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

தமிழ்நாட்டில் பழங்குடியின மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றி வரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் குடியரசு தினவிழாவில் பத்ம விருதுகள் வழங்கி மத்திய அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2019 ஆம் ஆண்டிற்கான பத்ம விருது 2019-ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் பெற விரும்புவோர் தங்களை பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும், அதற்கான விண்ணப்பத்தினை **www.padmaawards.gov.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி விண்ணப்பிக்கலாம் எனவும் அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை **20.07.2018-க்குள்** சமர்ப்பித்திடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், விண்ணப்பம் செய்வதற்கான தகுதி மற்றும் வரையறை விவரங்களை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- ஜெ.இன்னசென்ட் திவ்யா
மாவட்ட ஆட்சித்தலைவர்
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்

7/7/18